MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பிரமலைக் கள்ளர் இன மக்களின் இறப்புச் சடங்கு முறைகள்

**முனைவர் பட்ட ஆய்வாளர்**

**சு. சூரியபிரபா,**

முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 24TA402,

தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்,

பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, தமிழ்நாடு,

இந்தியா. மின்னஞ்சல் முகவரி : klithick@gmail.com,

தொலைபேசி எண் : 9952847176

**நெறியாளர்**

**முனைவர் இரா.மணிமேகலை**

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்,

பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

தமிழ்நாடு, இந்தியா.

**MARCH - APRIL**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

# Death Rituals of the Piraimalai Kallar People

**S. Suryaprabha,**

Tamil Research Scholar, Reg. No: 24TA402,

Tamil department, Kongunadu Arts and Science College,

Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India. Email ID : klithick@gmail.com,

Mobile number: 9952847176

**Dr. R. Manimegalai,**

Associate Professor & Head, Department of Tamil.

Kongunadu Arts and Science College,

Affiliated to Bharathiar University Coimbatore, Tamil Nadu, India.

**Study Summary**

In the early days, a man who lived in a group was afraid of another man who lived with him suddenly dying. So, to overcome this fear, he started performing various rituals. Death caused great fear in the minds of the primitive people. Many rituals were performed to appease the spirits of the deceased. These rituals were called Eemachadangam. This research article describes the way the people of Piraimalai Kallar people living in the southern part of Madurai district express their grief after announcing the news of death, how the relatives of the deceased perform the entire death ritual every day, the restrictions they have for this ritual, what kind of food they handle on those days, what priorities are given to maternal uncles and those who have married into that house, the rituals they have to perform at the house of the deceased, and what restrictions they have for the deceased until the end of a year.

**Keywords**

Sackcloth, interest, uruma, potuvanam, chariot

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## ஆய்வுச் சுருக்கம்

தொடக்க காலத்தில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்த மனிதன் தன்னோடு வாழ்ந்து வந்த மற்றொரு மனிதன் திடீரென்று இறந்ததைக் கண்டு பயந்தான். ஆகவே அவ்வாறு ஏற்படும் பயத்தைப் போக்கிக்கொள்ள பலவகைச் சடங்குகளைச் செய்யத் தொடங்கினான். ஆதி மக்களின் மனதில் சாவு மிகுந்த அச்சத்தை விளைவித்தது. சாவைத்தரும் ஆவிகளைத் திருப்திப்படுத்த பல சடங்குகளை மேற்கொள்ளலாயினர். இச்சடங்குகளை ஈமச்சடங்குகள் என்றழைத்தனர். மதுரை மாவட்டத்தில் தென்பகுதியில் வாழ்கின்ற பிரமலை கள்ளரின மக்கள் இறந்தச் செய்தியை அறிவிப்பதிலிருந்து அவர்களின் துன்பத்தை வெளிப்படுத்தும் விதத்தையும், இறந்தவரின் சகோதரர் உறவுமுறை உடைய வீட்டார்கள் இறப்புச் சடங்கு முழுவதையும் ஒவ்வொரு நாளும் எவ்வாறு செய்கின்றனர் என்பது பற்றியும் அச்சடங்கு முறைக்காக அவர்கள் வைத்துள்ள கட்டுப்பாடையும் அவர்கள் அந்நாட்களில் எவ்வாறான உணவு முறைகளை கையாளுகின்றனர் என்பதையும் தாய்மாமன் உறவுகளுக்கும் அவ்வீட்டில் திருமண பந்தம் செய்தவர்களுக்கும் எவ்வாறான முன்னுரிமைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் அவர்கள் இறந்த வீட்டிற்குச் செய்ய வேண்டியச் சடங்கு முறைகளையும் இறந்தவருக்கு ஒரு வருடம் முடியும் வரை எவ்வாறானக் கட்டுப்பாடுகளை வகித்துள்ளனர் என்பதையும் இவ்வாய்வுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

## திறவுச் சொற்கள்

சாக்காடு, வட்டி, உருமா, பொடுவனம், தேர்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## முன்னுரை

இறந்தவர்க்கு செய்யும் ஈமச்சடங்கை மதுரைமாவட்டத்தில் உசிலம்பட்டி, செல்லம்பட்டி, சேடப்பட்டி, திருமங்கலம், திருப்பரங்குன்றம், மேற்குப்பகுதி, சோழவந்தான் தென்பகுதிகளை உள்ளடக்கிய இப்பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட பிரமலைக் கள்ளர்கள் இப்பகுதியைப் பூர்வீகமாக கொண்டிருந்தாலும் மதுரை நகரத்திலும், தேனி, திண்டுக்கல் வரை பரவலாக வாழ்கின்ற மக்கள் ஒரு வீட்டில் உள்ளவர் இறந்தவுடன் அவர் இறப்புச் செய்தியை அறிவிப்பதிலிருந்து அவருக்குச் செய்ய வேண்டிய இறப்புச் சடங்கு முறைகளை இறந்தவர் வீட்டினரும், சகோதரன் உறவு உடையவர்களும் (பங்காளிகள்), பிற உறவினர்களும் எவ்விதமான சடங்கு முறைகளை கையாளுகின்றனர் என்பதனையும் மக்கள் இறப்பு சடங்கிற்கு தங்களுக்கு என்று வகித்துக் கொண்ட கட்டுப்பாடுகளையும் இவ்வாய்வு கட்டுரை மூலம் அறிந்து கொள்ளலாம்.

## இறப்புச் சடங்குகள்

கால மாற்றங்கள் அடைவதற்கேற்ப மக்களின் இறப்புச் சடங்குகளும் அம்மக்களின் இனத்திற்கேற்ப காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், பணவசதிக்கேற்ப மாறுபடுகின்றது. மனிதன் தனது வாழ்க்கை வசதிக்கேற்ப சுருக்கியும் விரித்தும் மரணச் சடங்குகளைச் செய்கின்றனர்.

**செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்**

**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்**

**( திரு. சிவபுராணம் - 26-31)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

இவ்வுலகில் பிறக்கும் ஓர் அறிவு கொண்ட உயிர் முதல் ஆறறிவு உடைய மனிதன் வரை பிறப்பும் இறப்பும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றது. உலகில் தோன்றும் உயிரினங்கள், எல்லா பிறப்பையும் எடுக்கும் என்று திருவாசகத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதேபோல் திருவள்ளுவரும் திருக்குறளில் பிறப்பு இறப்பை பற்றி கூறியுள்ளார்.

**உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி**

**விழிப்பது போலும் பிறப்பு. ( குறள் - 339)**

இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது. எனவே பிறப்பு, இறப்பு இரண்டுமே ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். உலகில் பிறப்பவர்கள் அனைவருமே ஒருநாள் இறப்பது நிச்சயமான ஒன்று. ஆனால் "இறப்பு என்பது அவரவர் செய்த கர்மவினைப் பயன்களுக்குகேற்பவே இறப்புகள் மூப்பு, நோய், கொலை, தற்கொலை, அகால மரணம், மரண தண்டனை, வீரமரணம் என அமைகின்றன. இவைகளுக்குரிய சடங்கு முறைகளிலும் சில மாறுபாடுகள் இருக்கின்றன". மதுரை மாவட்டத்தில் தென்பகுதியில் வசிக்கும் பிரமலைக்கள்ளரின மக்கள் நன்கு வாழ்ந்து இறந்தவர்க்கும், இயற்கை மரணம் அடைந்தவர்க்கும் முறைப்படி எல்லாச் சடங்குகளையும் செய்வர். அவ்வாறு அல்லாது தற்கொலை செய்து கொண்டு இறந்தவர்களுக்கும் திடீர் விபத்துகளால் இறந்தவர்களுக்கும் முறையாக செய்யும் சடங்குகளில் சில சடங்குகள் கிடையாது. இந்த இரு சடங்குகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தாலும் சில சடங்குகள் பிரமலைக்கள்ளர் மக்கள் செய்ய வேண்டிய சடங்கை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

செய்தாக வேண்டும் என்ற கட்டுப்பாடும் உள்ளது.

## இறந்தவுடன் செய்யப்படும் முதல் சடங்குகள்

ஊரில் ஒருவர் இறந்துவிட்டால் அவரின் குடும்பத்தார் அவர்களின் சகோதர உறவுடையவர்களுக்கு (பங்காளி) தெரிவிப்பர். அதன் மேல் அவர்கள் தான் அந்த இறப்பு வீட்டில் அனைத்து சடங்குகளையும் எடுத்துச் செய்ய ஆரம்பிப்பர். அதில் முதல் சடங்காக இறந்தவரின் உறவினர் ஊர்களுக்கும் சம்பந்தம் செய்த சம்பந்தக்காரர்கள் ஊர்களுக்கும் இறப்புச் செய்தியை அறிவிக்க தயார் செய்வர்.

**"மாந்தர்கள் இறப்பைக் குறித்திடும் பறையின்**

**வல்லொலி கேட்டபோ தெல்லாம் [திருவருட்பா 3428.]**

இப்பாடலில் கூறப்பட்டுள்ளது போலவே ஊரில் துப்புரவு பணி செய்பவரை தோட்டி என்று அழைப்பர். அவர்களில் ஒருவரை அழைத்து அவரிடம் பணம் கொடுத்து தப்படித்து ஊரில் உள்ளவர்களுக்கும், பிற ஊர்களுக்குச் சென்று இறப்புச் செய்தியை அறிவித்து வரும்படி கூறி விடுவர். ஊரில் உள்ளவர்கள் கூடிய பின்னர் இறந்தவருக்கு முடி திருத்தம் செய்தபின் சகோதரர்கள் குளிப்பாட்டுவார்கள். குளிப்பாட்டிய பின் புத்தாடை மாற்றி நெற்றியில் பொட்டும் நெற்றிக் காசும் வைத்து பின் நாடி கட்டு போட்டு, மூக்கில் பஞ்சு வைத்து இறந்தவரை படுக்க வைப்பர். நிறைமரக்கால் நெல்லின் மேல் எண்ணெய் ஊட்டாமல் திரி போடாமல் காமாட்சி விளக்கை மட்டும் வைத்து தேங்காயை உடைத்தும் வாழைப்பழத்தையும் இறந்தவரின் அருகில் மூன்று குச்சியை வைத்து பந்தக்கால் ஊண்டுவார் நாவிதர் (முடி திருத்தம் செய்பவர்).

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## ஒப்பாரி வைத்தல்

இறந்தவர்கள் மீது பாடப்படும் பாடல்களே "ஒப்பாரி" என்று அழைக்கப்படும். இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவதும் ஒப்பாரியாகும். துக்கத்தின் வெளிப்பாடே அழுகை. மன அமைதிக்காகவும், ஆறுதலுக்காவும் புலம்புகின்றனர். துயரத்தைத் தாங்கிக்கொள்ள இயலாத பெண்களே ஒப்பாரிப் பாடல்களைப் பாடுகின்றனர். இறந்தவர்களுக்கு ஒப்பாரி வைத்து அழுவது வழக்கமான ஒன்றாகும். கணவனுக்காகவும், பெற்றோர்களுக்காகவும், உடன் பிறந்தவர்களுக்காகவும், மாமன் அத்தைக்காவும் இறந்த பொழுதில் பெண்கள் ஒப்பாரி பாடுகின்றனர், "தலைச்சன் பிள்ளை பெத்தவளுக்குத் தாலாட்டும் புருஷனை இழந்தவளுக்கு ஒப்பாரியும் தானாகவே வரும்" என்ற பழமொழி இக்கருத்துக்கு அரணாக விளங்குகிறது.

**இளிவே இழவே அசைவே வறுமையென**

**விளியில் கொள்கை அழுகை நான்கே" (தொல். மெய் - 249)**

என்று அழுகைப்பாட்டிற்கு இலக்கணம் கூறுகிறார் தொல்காப்பியர். பல இலக்கியங்களில் இறந்தவர்களை எண்ணி வருந்தும் பாடல் செய்திகள் இடம் பெற்றுள்ளன. 'புறநானூற்றில்' பாரி இறந்தபின் பாரியின் மகள், "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்" ( புறம் - 112) பாடலில் அதியமான் இறந்த பிறகு ஔவையார் அதியமானை நினைத்து "சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே" 235 பாடலும் இடம்பெற்றுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**"தாலி பெருஞ்சரடு தாழம்பூ நச்சரடு**

**தாலிமேல் கைவச்சா தாளாதய்யா எம்மனசு!**

**( நாட்டுப்புறவியல் -209)**

என்ற இப்பாடல் கணவனை இழந்த பெண் ஒப்பாரி வைத்து அழுவதைக் கூறுகிறது. பிரமலைக் கள்ளரின பெண்கள் கூடி, ஒப்பாரி வைப்பதோடு பிற ஊர்களில் இருந்தும் ஒப்பாரி வைப்பதற்காக நடன கலைஞர்களையும், இசைக்கலைஞர்களையும் அழைத்து வந்து இறந்தவரைப் பற்றிய விபரங்களைக் கூறி அவர் வாழ்ந்த வாழ்க்கைச் சிறப்பு பற்றியும் எடுத்துப் பாடிக்கொண்டு, நடனம் ஆடிக்கொண்டு ஒப்பாரி வைத்து அழுவர்.

**வட்டி கொண்டு வருதல்**

இறந்தவரை படுக்க வைத்த பின்னர் சகோதர உறவு உடைய வீட்டார் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை பேரும் அவர்களின் வீட்டில் இருந்து பச்ச அரிசியில் மஞ்சள் தடவிப் வட்டியில் போட்டு கொண்டு வந்து இறந்தவரின் வீட்டில் வைப்பர். இந்த அரிசியை தான் இறந்தவரது வாயில் கடைசியாக (வாய்க்கjரிசி) போடுவதற்கு பயன்படுத்துவர்.

**கோடி கொண்டு வருதல்**

கோடி கொண்டு வருதல் என்பது (பச்சை கொண்டு வருதல்) இறந்தவரின் தாய்மாமன் உறவினரும், அவ்வீட்டில் திருமணம் செய்த உறவினரும் இறந்தவருக்கும் அவர் குடும்பத்திற்கும் கொண்டு வரும் கோடி துணியாகும். ' கோடி உடுப்பித்தல் மறவாக பயின்று வரும் வழக்கம் ஆகும்' என்று கூறப்படுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

கோடி கொண்டு வருவதும் முறைப்படி முதலில் தாய்மாமன்கள் கொட்டடித்தும், பட்டாசு வெடித்தும் தம் ஊரில் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு குளிப்பாட்டுவதற்கு நல்லெண்ணெய், சீவக்காய், மாலை, நீர்மாலை எடுக்க குடம், பச்சை நெல்லும் ஒரு பாத்திரத்தில் வைத்து அதன் மேல் இறந்தவருக்கு வேட்டியும், இறந்தவரின் மனைவிக்கும், வீட்டில் பிறந்த பெண்களுக்கும், வீட்டிற்கு வாழ வந்த மருமகள் என எல்லோருக்கும் சேலையும் அந்த பச்சை நெல் மேல் போட்டு கொண்டு வருவர். அவர்கள் வந்த பின்னர் பெண் கொடுத்த அல்லது பெண் எடுத்த உறவினர்களும் கோடி கொண்டு வருவர். . அந்த பச்சைக் கூடையை குடும்பமாரன் ( பள்ளர்) இனத்தைச் சேர்ந்த ஆண்கள் தூக்கி வருவார்.

**நீர் மாலை எடுத்தல்**

நீர்மாலை எடுப்பதற்கு வீட்டில் பிறந்த பெண்களும், பேத்திகளும் ஊர் கிணற்றுக்குச் சென்று குளித்த பின் திருநீர் அணிந்து கதம்ப பூக்களை மாலையாக கழுத்தில் போட்டுக் கொண்டு தாய்மாமன் வீட்டாரும் பிறந்த வீட்டாரும் வாங்கி வந்த குடத்தில் நீர்மாலை எடுத்து வருவார்கள் அதன் பின்னர் ஆண்களும், பேரன்களும் எல்லோரும் அந்த ஊரில் தெருவின் எல்லை என சொல்லப்படும் இடத்தில் தான் மண்ணாலான பானையை உடைப்பர் அவ்விடத்திற்கு இவர்கள் வெள்ளை வேட்டியை மாமன்மார்கள் குடை போல பிடித்துக்கொண்டு வர இவர்கள் நடந்து செல்வார். நாங்கள் துணையாக இருக்கின்றோம் என்பதனை தெரிவிக்கும் விதமாக வேட்டியை குடையாக பிடித்து செல்வதாக கூறுகின்றனர். அவ்விடத்திற்குச் சென்று வட்டியில் கொண்டு வந்த அரிசியை வைத்து நாவிதர் நிரைச்செம்பு தண்ணீர் வைத்து கோவிந்தா கோவிந்தா எனக் கூறி சாமி கும்பிட்டு விட்டு

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

திரும்பி வரும்போழுது பிடித்துச் சென்ற வேட்டியை மாற்றி தலைகீழாக பிடித்து வருவர். இவர்கள் வந்த பின்னர் இறந்தவரின் உறவினர்கள் பிறங்கையில் எண்ணெயையும், சீவக்காவையும் தடவி விடுவர். அதன் பின் இறந்தவரை குளிப்பாட்டுவர் குளிப்பாட்டி தூக்கி வைத்த பின்னர் கோடியில் கொண்டு வந்த துணியைப் போத்துவர்.

**கால்கழி கட்டிலிற் கிடப்பித்**

**தூவெள் அறுவை போர்ப்பித் திலதே! (புறம் - 286)**

இப்பாடலில் இறந்தவர்களின் மீது வெண்மையான துணியைப் போர்த்தும் செய்தி இடம்பெற்றுள்ளது. பெண்கள் எல்லோரும் வட்டியில் கொண்டு வந்த அரிசியை வாயில் போடுவர்

**ஸ்ரீதேவி வாங்குதல்**

கோடி துணியை போர்த்திய பின்னர், வீட்டிற்கு திருமணமாகி வந்த மருமகள்கள் ஸ்ரீ தேவி வாங்குவார்கள். இறந்தவர் கையில் இருந்து காசை வைத்து வாங்குவர். அதன் பின் சாணத்தில் நவதானியங்களைப் போட்டு உருண்டையாக பிடித்து அதனை இறந்தவர் கையில் இருந்து வாங்கி ஒரு மூங்கில் தட்டையில் அதனை தட்டி வைப்பார். அந்த மூங்கில் தட்டில் வைக்கப்பட்ட சாணத்தை உருமா கட்டு செய்முறை செய்யும் நால்வரை அதில் தண்ணீர் தெளித்து வளர்த்து வருவர்.

**பாடைக் கட்டுதல்**

பாடைக்கட்டுதலை பிரமலைக்கள்ளர் மக்கள் தேர் கட்டுதல் எனக் கூறுகின்றனர். இந்த தேரை கூரை கட்டும் வேலை செய்யும் இனத்தவர் தான் தேரை கட்டுவர். தேர் கட்டுவதற்கு அவருக்கு நெல்லையும், பணத்தையும் கூலியாகக் கொடுப்பர். தேர் கட்டுவதை மிகவும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மரியாதைக்குரியதாக அம்மக்கள் பார்த்தனர். இறந்தவருக்கு எப்படி தேர் கட்டப்பட்டது யாருடைய தேர் மிகவும் பெரிதாக இருந்தது பார்க்க அழகாக இருந்தது என்பதெல்லாம் பெரிய மரியாதைக்குரியதாகக் கருதினர். அதனால் தேர் மிகவும் பெரியதாகவும் மிக அழகாகவும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

**கள்ளி போகிய களரி மருங்கின்**

**வெள்ளில் நிறுத்த பின்றைக் கள்ளொடு ( புறம்- 360)**

என்ற புறநானூற்றுப் பாடல் இறந்தவருக்குப் பாடைக் கட்டுவதைக் கூறுகிறது. இறந்தவரை பாடை ஏற்றுவதற்கு முன்பு அவர் மனைவியின் கழுத்தில் இருக்கும் மஞ்சள் கயிறு அறுத்து அவர் காலில் கட்டி விடுவார். பாடையில் ஏற்ற இறந்தவரை தூக்கும் போது அவரின் நெருங்கிய உறவான மகள், மனைவி, மருமகள் ஆகியோர் தலைவிரி கோலமாகத்தான் அழ வேண்டும். அதன் பின் தேரில் ஏற்றி சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வர். தேரின் பின்னர் பேரன்கள் ஊதுபத்தி பிடித்து செல்வார்கள். கொள்ளி வைப்பவர் வீட்டிலிருந்து கொள்ளி வைப்பதற்கான குச்சியை எடுத்து செல்ல வேண்டும். போகும் வழிகளில் கோடியில் கொண்டு வந்த நெல்லை எடுத்து அதனுடன் மஞ்சளைத் தடவி அதனைப் பொறித்து பொறியாக்கி அந்தப் பொறியினையும், கடுகையும், எலுமிச்சம் பழத்தையும் அறுத்து வீதிகளில் போட்டுக்கொண்டே செல்வர்.

**மண்பானை உடைத்தலும், கொள்ளி வைத்தாலும்**

இறந்தவரை தெரியலைக்கு கொண்டு வந்த பின்னர் கணவன் இறந்தால் மனைவி மூன்று முறை சுற்றி வந்து மண்பானையை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

உடைப்பாள் (குடமுடைத்தல்) உடைத்து உடனே அவள் தலையில் நிரைபானை தண்ணீரை ஊற்றி, பிறந்த வீட்டார் எடுத்து வந்த சேலையைப் போர்த்தி திரும்பி பார்க்காமல் உடன் சென்ற எல்லா பெண்களும் வீட்டிற்குத் திரும்பி வந்து விடுவார். தாய் இறந்தாள் மகள் குடமுடைப்பாள்.

**சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்**

**தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிழ்ப்போர்" (மணி : 6. 66-68)**

சுடுகாட்டுக்குச் சென்று தேரை இறக்கி வைத்து இறந்தவரை மேடையில் படுக்க வைப்பர். அப்போது நாவிதர் 'பொடுவனம் காசை' போடுங்கள் என்று கூறுவார். சுடுகாடுக்குச் சென்ற உறவினர்கள் அனைவரும் இறப்பு சடங்குக்கு வேண்டிய பணத்திற்காக தங்களால் முடிந்த பணத்தை போடுவார்கள். அதன் பிறகு கொள்ளி வைப்பவருக்கு மொட்டை போடுவர். மொட்டை அடித்த பின் தாய்மாமன் குளிக்க வைத்து வேட்டி கொடுத்து துண்டைப் போத்தி விடுவார்கள். கொள்ளி வைப்பவர் சுடுகாட்டில் மீண்டும் மூன்று முறை சுற்றி வந்து மண்பானையை உடைப்பார். கடைசியாக ஆண்கள் அனைவரும் முகத்தைப் பார்த்துவிட்டு வட்டியில் கொண்டு வந்த அரிசியை வாயில் போட்டுவிட்டு வருவர். கடைசியாக அனைவரும் முகத்தை பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிய பின்னர் தந்தை இறந்தால் இளைய மகன் கொள்ளி வைப்பான். தாய் இறந்தாள் மூத்த மகன் கொள்ளி வைப்பான். கொள்ளி வைத்த பின்னர் நாவிதர் வசூலித்த பணத்தை இறப்புச் சடங்கு வேலை பார்த்த ஒவ்வொருவருக்கும் பணத்தை பிரித்து கொடுக்க சொல்வார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**

**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**

**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**

**நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.**

**(திரு. திருமந்திரம் 145)**

சுடுகாடுக்குச் சென்ற அனைவரும் வீட்டுக்கு வருவர் அவர்கள் வரும்போது வீட்டு வாசலில் நெல் குத்தும் உலக்கையைப் போட்டு நிரைகுடத் தண்ணீரை வாசலில் ஊற்றி விடுவார். அந்த தண்ணீரை மிதித்து உலக்கையைத் தாண்டி வீட்டுக்குள் வந்தவுடன் வேப்பிலையையும், பச்சரிசியையும் சாப்பிட கொடுப்பார்கள். அதன் பின்னர் சகோதரர்கள், மாமன்மார்கள், பிற உறவினர்கள் என அனைவரையும் அமர வைத்து கேட்பார்கள் உருமாகட்டு செய்முறையை என்று வைத்துக் கொள்ளலாம் என்று மாமன்மார்கள் ஏழாம் நாள் அல்லது ஒன்பதாம் நாள் வைத்துக் கொள்ளலாம் என்று கூறினால் சரி என்று பங்காளி ஒத்துக் கொள்வார்கள்.

**பால் ஊற்றுதலும், சாம்பல் கரைத்தலும்**

சுடுகாட்டுக்குச் சென்று வீட்டுக்கு வந்த பின்னர் இறப்பு வீட்டார் மூன்று நாளைக்கு சமையல் செய்ய மாட்டார்கள் அதனால் அவர்களின் சகோதர உறவுடைய வீட்டார்தான் அவர்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொடுப்பார்கள். மறுநாள் காலையில் ஆண்கள் மட்டும் சுடுகாட்டிற்கு பால் ஊற்ற செல்லுவர். இறந்தவரை எரித்த இடத்தில் பால், இளநீர், கோமியம் ஊற்றி நெருப்பை அணைத்து அந்த சாம்பலை ஒரு மண்பானையில் எடுத்த பின்னர் நவதானியங்களை அதில் தூவி விடுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

அதன் பின்னர் ஆண்கள் அனைவரும் சேர்ந்து திருவேடம் அல்லது அணைப்பட்டி ஆகிய இடங்களுக்குச் சென்று சாம்பலை கரைத்து விட்டு (அங்கம் கலந்து) வீட்டுக்கு வருவார்கள்.

**உண்ணும் உணவுகள்**

சாம்பலை கரைத்து விட்டு வருபவர்களுக்கு காணப் பயரையும் அரிசியையும் ஒன்றாக சேர்த்து காணங்கஞ்சியை கொள்ளிக்காக வைத்த அடுப்பில் கஞ்சியை காட்சி அதனுடன் காய்ந்த மிளகாயை சுட்டும் வைத்திருப்பர். வட்டியாக கொண்டு வந்த பாத்திரத்தில் அந்த காணங் கஞ்சியை அனைவருக்கும் ஊற்றிக் கொடுப்பர். கஞ்சியை மட்டும் குடித்துவிட்டு வேறு எதுவும் சாப்பிட மாட்டார்கள். மாலையில் மொச்சை பயிரை வறுத்து வேகவைத்து அதனுடன் கம்பை வறுத்து இடித்து அந்த மாவையும் சேர்த்து அகத்திக் கீரையும் அவித்து ஒன்றாக கலப்பர் அதன் பின் ஆல மரத்து இலையை 9 அல்லது 11 எடுத்து அதனை ஒன்றாக கோர்த்து அதன் மீது இறந்தவரின் துணியை வைத்து அதன் அருகில் நிரைசெம்பு தண்ணீரையும் மாவு பயிறு கலவையை வைத்து சாமி கும்பிட்ட பின் அனைவருக்கும் சாப்பிட கொடுப்பர். இது எதற்காக என்றால் இரண்டு நாளாக சரியாக உண்ணாமல் இருப்பதால் உடல் பலமின்றி இருக்கும் உடலுக்குப் பலம் சேர்க்கும் விதமாக இவைகளை உணவாக முதலில் கொடுக்கின்றனர். மூன்றாம் நாள் தாய்மாமன் வீட்டாரும், திருமணம் செய்த உறவினரும் தலை முழுகுவதற்கு நல்லெண்ணெய், சீயக்காய் மற்றும் அன்று சமைப்பதற்கான அரிசி, காய்கறி, பருப்பு, மசால் எல்லாவற்றையும் வாங்கி வருவர். முதலில் கொள்ளி வைத்தவருக்கு தாய்மாமன் தலையில் எண்ணெய் வைப்பார். அவரைத் தொடர்ந்து பிற உறவினர் எண்ணெய் வைத்த பின்னர் வீட்டிலுள்ள அனைவரும் எண்ணெய்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

தேய்த்துக் குளித்த பின்னர் வாங்கி வந்த பொருட்களை வைத்து சமைத்து உண்பர். அன்று வீட்டில் தனியாக ஒரு சிறு பாத்திரத்தில் சாம்பாரும் சாப்பாடு சாப்பாடும் செய்து காக்கைக்கு படையல் வைப்பர்.

**தாய்மாமன் செய்முறை செய்தல்**

ஏழாவது நாள் அல்லது ஒன்பதாவது நாள் உருமா கட்டு (காரியம்) வைப்பர். உருமா கட்டு ( காரியம் ) வைப்பர் வைப்பர். உருமா கட்டு முதல் நாள் இரவில் நிரைசொம்பு வைத்து பெண்கள் சேர்ந்து அழுவர். மறுநாள் காலையில் பச்சையாகக் கொண்டுவரப்பட்ட நெல்லை அவித்து அரைத்த அரிசியில் சமைத்து இறந்தவருக்குப் பிடித்த அனைத்த பொருட்களையும் பந்தக்கால் ஊண்டிய இடத்தில் படையல் இடுவர் அதனுடன் அவருடைய துணியும் வைத்து சாமி கும்பிட்டு காக்கைக்கு வைத்து காக்கை உண்ட பின்னர் எல்லோரும் படையல் இட்டதை மாமன்கள் வருவதற்கு முன் சாப்பிட்ட மீதத்தையும் நாவிதர் குழி தோண்டி புதைத்து விடுவார். அதன் பின்னர் பந்தக்கால் குச்சிகளை பானை உடைத்த இடத்திற்குச் சென்று போட்டுவிடுவார் நாவிதர். உருமா கட்டுவதற்காக அனைவரும் வந்த பின்னர் அண்ணன் தம்பிகள் வரிசையாக நிற்க முதலில் கொள்ளி வைத்தவருக்கு தாய்மாமன் தலையில் துண்டை வைத்து உருமா கட்டி விபூதி பூசி விட்டு அவருக்கு துணியை கையில் கொடுப்பார் . ஒவ்வொருவர் பின் ஒவ்வொருவராக துண்டை உருமாடு கட்டி விடுவர். உருமாக்கட்டுக்கு வந்தவர்களுக்கு சமைத்து சாப்பாடு போடுவார். அவர்கள் சாப்பிட்டு சென்ற பின்னர் ஸ்ரீதேவியாக வாங்கிய நவதானிய சாண உருண்டை முளைத்ததை விவசாய நிலங்களில் தூவி விடுவர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**கறி விருந்திடுதல்**

உருமா கட்டுக்கு மறுநாள் கறி விழுந்திடுதல் (காட்சி ஊத்துதல் மாமன் மார்களுக்கும், வீட்டில் திருமணம் செய்த உறவினர்களுக்கும், வீட்டில் பிறந்த பெண்களுக்கும் கறி எடுத்து சமைத்து சாப்பாடு போடுவர். அதற்கான படத்தை தாய்மாமன்களும், பிற உறவினர்களும் பகிர்ந்து கொடுப்பார். அந்த பணத்தை வைத்து மறுநாள் அனைவரையும் அழைத்து கறி எடுத்து சமைத்து போடுவர். அன்று மாலை பெண்பிள்ளைகளுக்கு பிறந்த விட்டு சீராக பித்தளை பாத்திரம் ஒன்று, சமைப்பதற்கான காய்கறிகள், மசால், அரிசி, பருப்பு மற்றும் சீலை துணியையும் வைத்து நாத்தினார் முறையுடையவர்கள் அப்பாதிரட்டை தலையில் தூக்கி வைத்து அந்த பெண்களின் வீட்டிற்கு பிறந்த வீட்டார் அழைத்துச் சென்று விட்டு வருவார்

**முப்பதாம்நாள் விளக்கேற்றல்**

இறப்பு வீட்டார் முப்பது நாள் முடிந்த பின்னர் பெருமாள் கோயிலுக்குச் சென்று எண்ணெய் வாங்கி ஊற்றி வணங்கி விட்டு வீட்டுக்கு வந்த பின்னர் பூஜை அறையில் இருக்கும் விளக்கை ஏற்றி வீட்டில் சாமி கும்பிடுவர். அதன் பின்னர் அன்று எல்லா வகையான காய்களையும் போட்டுச் சாம்பார் வைப்பர், கசப்புக்குரிய காய்களை மட்டும் தவிர்த்து சமைத்து இறந்தவரை வணங்கி விட்டுக் காக்கைக்குப் படையல் இட்ட பின்னர் அனைவரும் சாப்பிடுவர். அதன் பின்னர் அவர்களின் குலதெய்வ கோயில்களுக்குச் சென்று எண்ணெய் மட்டும் வாங்கி விளக்கில் ஊற்றி சாமியை வணங்கி விட்டு வருவர்.

**திதி செய்தல்**

இறந்தவருக்கு ஒரு வருடம் ஆகும் வரை கோயில்களுக்குச்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

செல்லலாம் வழிபடலாம் ஆனால் தேங்காய் உடைத்தல், சாமிக்கு மாலை அணிவித்தல், பொங்கலிடுதல், மொட்டை அடித்தல், நேர்த்திக் கடன் செலுத்துதல், வாசலில் கோலம் இடுதல் என எதுவும் செய்ய மாட்டார்கள் அதேபோல ஒரு வருடம் ஆகும் வரை கடல் மற்றும் மலை கோயில்களுக்குச் செல்ல மாட்டார்கள். ஒரு வருடம் முடிந்த பின்னர் இராமேஸ்வரத்திற்குக் குடும்பத்தோடுச் சென்று இறந்தவருக்குத் திதிக் கொடுத்துவிட்டு உருமா கட்டும்போது சாமி கும்பிட்டு எடுத்து வைத்த அவர் துணியையும் அங்கு சென்ற அனைவரும் குளித்துவிட்டு அவர்கள் துணியையும் கடலில் விட்டு பின் புத்தாடை மாற்றிக்கொண்டு அங்குள்ள சாமியை வணங்கிவிட்டு வீட்டுக்கு வருவர்.

### திடீர் மரணச் சடங்குகள்

மேற்கூறப்பட்டுள்ள அனைத்து சடங்குகளும் நன்கு வாழ்ந்து இறந்தவருக்கும், இயற்கை மரணம் அடைந்தவர்க்கும் செய்யும் சடங்குகள் ஆகும். தற்கொலை செய்தோ அல்லது திடீர் விபத்து மூலம் இறந்தாலோ வீட்டில் வைத்து இந்த சடங்குகளை செய்ய மாட்டார்கள். நேராக சுடுகாட்டிற்கு தூக்கிச் செல்வர் அவரை தூக்கிச் செல்லும் போது பொறி போடாமல் வெறும் கடுகை மட்டும் போட்டுக்கொண்டு போவார்கள். சுடுகாட்டில் வைத்தே தாலியறுத்தல், வாய்க்கு அரிசி போடுதல் ஆகிய சடங்குகள் முடித்தவுடன் பெண்களை வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவர். இவ்வாறு இறந்தவர்களின் இறப்பு சடங்கில் பந்தக்கால் உண்டுதல், நீர் மாலை எடுத்தல், கோடி கொண்டு வருதல், ஸ்ரீதேவி வாங்குதல், பாடை கட்டுதல், மண்பானை உடைத்தல் ஆகிய சடங்குகள் கிடையாது. மற்றபடி பாலூட்டுதல், சாம்பல் கரைத்தல் , உணவு முறை, மூன்றாம் நாள் சடங்கு, கறி விருந்து விடுதல்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

உருமா கட்டு செய்முறை வாங்குதல், ஆகிய சடங்குகள் முறைப்படி செய்தாக வேண்டும் என்ற கட்டுப்பாடு உள்ளது என்று அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

**முடிவுரை**

பிறக்கும் எல்லா உயிருக்கும் இறப்பு நிகழும் என்று எல்லோருக்கும் தெரிந்தாலும் அந்நிகழ்வு திடீரென்று நடைபெறும் போது அதனை ஏற்க முதலில் மனம் மறுக்கின்றது. அதன் வெளிப்பாடாகத்தான் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுகின்றனர். ஒருவர் வாழும்போது செய்யப்படும் சடங்குகள் எல்லாம் எவ்வளவு முக்கியமானதோ அதுபோல ஒருவர் இறந்த பின்னும் அவர் உடலுக்கு செய்ய வேண்டிய சடங்குகளை முறைப்படி செய்வது அவருக்கு கொடுக்கும் மரியாதை என்று பிரமலைக்கள்ளர் இனமக்கள் நம்புகின்றனர். அதனால் இறந்தவருக்கு செய்ய வேண்டிய சடங்குகளை முறைப்படி செய்வதற்கு சில கட்டுப்பாடுகளையும் முறைகளையும் வகுத்து வைத்துள்ளனர். அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டாலும் இறப்புச் சடங்கு முறைகளை மாற்றம் செய்யாமல் செய்து வருகின்றனர்.

**துணை நூற்பட்டியல்**

1. அழகர் நம்பி - திருமூலர் திருமந்திரம், கவிதா பப்ளிகேஷன், சென்னை, முதற்பதிப்பு: 2021.

2. கூலவணிகள் சீத்தலை காத்தனார் - மணிமேகலை, முதராஸ் ரிப்பன் அச்சு எந்திர சாலை - சென்னை 600018, முதற்பதிப்பு - 1894.

3. கௌமாரிஸ்வரி, எஸ் - திருக்குறள், (பரிமேலழகர் உரை) சாராதா பதிப்பகம். சென்னை 600014, முதற்பதிப்பு - ஏப்ரல் 2002.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

4. சக்திவேல் சு - நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம். 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108, முதற்பதிப்பு 1983.

5. சன்முகசுந்தரம்.சு - நாட்டுப்புறவியல், மணிஆப்செட், சென்னை - 600005 முதற்பதிப்பு - சனவரி 1975.

6. சுப்பிரமணியன் ச. வே - தொல்காப்பியம் பொருளதிகாரம். மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் 608001. முதற்பதிப்பு சூன் 2008.

7. திருமதி இரத்தினதேவி மதியாபரணம் - தமிழ் மரபில் மரணச் சடங்குகள்

8. பெரியண்ணன். கோ. நல்லாமூர் - நாடு போற்றும் நாட்டுப்புற பாடல்கள், அம்சா பதிப்பகம், 9அ, 4 வது தெரு, மேக் மில்லன் காலனி, நங்கை நல்லூர், சென்னை - 600016..

9. புலியூர்க்கேசிகன் - புறநானூறு, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை 600018, முதற்பதிப்பு 2010.

10. புலவர். அடியன்மணிவாசன்- திருவருட்பா, பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம், கோனார் மாளிகை, 25 பிட்டர்ஸ் சாலை, சென்னை - 600014.

11. மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம், ஞானசம்பந்தம் பதிப்பகம், தர்மபுரி - 1949

12. மிதுன். ச - பணியர் இன மக்களின் சடங்குகள், பழங்குடிகளின் வாழ்வியல் முறைகளும் மரபறிவு நுட்பங்களும், முனைவர். ச. அரிச்சந்திரன், பிரடாக் பிரிண்ட், 476, பூமாதேவி கோயில் அருகில் கவுண்டர் மில்ஸ், கோயம்புத்தூர் - 641029, முதல் பதிப்பு - அக்டோபர் 2023.